**செ. கு. எண்:172** **நாள் :09.09.2014**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 9.9.2014

16.4.2014 அன்று சென்னை, தியாகராய நகர், தெற்கு உஸ்மான் சாலை அருகே சாலையை கடக்க முயன்ற சைதாப்பேட்டையைச் சேர்ந்த திரு. ஜானகிராமன்;

17.4.2014 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், கடப்பேரி கிராமம், ஜி.எஸ்.டி சாலை அருகே இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த சோழிங்கநல்லூர் வட்டம், உள்ளகரம் கிராமத்தைச் சேர்ந்த திரு முருகன் என்பவரின் மனைவி ஜான்சிராணி;

27.4.2014 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், வெள்ளிதிருமுத்தம் கிராமம், காந்திரோடு அருகே சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த திரு. முனுசாமி என்பவரின் மகள் செல்வி சிவகாமசுந்தரி;

30.4.2014 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், கொட்டிவாக்கம் அருகே சாலையைக் கடக்க முயன்ற கொட்டிவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் என்பவரின் மனைவி திருமதி கோவிந்தம்மாள்;

30.4.2014 அன்று சென்னை, மந்தைவெளி, ராமகிருஷ்ணா மடம் அருகே இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த மயிலாப்பூரைச் சேர்ந்த திரு. ஆதிநாராயணன் என்பவரின் மகன் அனந்தபத்மநாபன்;

2.5.2014 அன்று திருவண்ணாமலை மாவட்டம் செய்யார் வட்டம், எச்சூர் கிராமம் அருகே இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த வந்தவாசியைச் சேர்ந்த திரு. ஷேக் தாவூத் என்பவரின் மகன் சையத் பஷீர்;

2.5.2014 அன்று புதுக்கோட்டை மாவட்டம், தஞ்சாவூர் பிரதான சாலையில் இரு சக்கரவாகனத்தில் பயணம் செய்த கந்தர்வக்கோட்டை, பிசானத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. வெள்ளைச்சாமி என்பவரின் மகன் இளையராஜா;

6.5.2014 அன்று மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம், திருப்பரங்குன்றம் பைபாஸ் சாலையில் ஆட்டோ மீது அரசுப் பேருந்து மோதியதில் ஆட்டோ ஓட்டுநர் திரு. படித்துரை;

11.5.2014 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், செவிலிமேடு கிராமம், காஞ்சிபுரம் - வந்தவாசி நெடுஞ்சாலையில் மிதிவண்டியில் பயணம் செய்த புஞ்சை அரசந்தாங்கல் கிரரமத்தைச் சேர்ந்த திரு. ராமபிள்ளை என்பவரின் மகன் முருகப்பிள்ளை;

12.5.2014 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், கூடுவாஞ்சேரி, சீனிவாசபுரம் அருகே இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த செங்கல்பட்டு வட்டம், காயராம்பேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரராகவன் என்பவரின் மகன் பிரபாகரன், நந்திவரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகேசன் என்பவரின் மகன் ரகுநாதன்;

-- ஆகியோர் அரசுப் பேருந்து மோதியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

16.4.2014 அன்று சென்னை, பட்டினபாக்கம் அருகே ஆட்டோவில் சென்று கொண்டிருந்த பட்டினபாக்கம், சீனிவாசபுரத்தைச் சேர்ந்த திரு. மகாலிங்கம் என்பவரின் மனைவி திருமதி சாந்தி ஜீப் மோதியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**